St. Flavian
C.M.



பாமாலை 188 B உம்மாலே தான் என் இயேசுவே

1. உம்மாலேதான் என் இயேசுவே,
ரட்சிக்கப்படுவேன்;
உம்மாலேதான் பேரின்பத்தை
அடைந்து களிப்பேன்.

2. இப்பந்தியில் நீர் ஈவது
பரம அமிர்தம்;
இனி நான் பெற்றுக்கொள்வது
அநந்த பாக்கியம்.

3. இவ்வேழை அடியேனுக்கு
சந்தோஷத்தைத் தந்தீர்
இக்கட்டு வரும்பொழுது
நீர் என்னைத் தேற்றுவீர்.

4. பூமியில் தங்கும் அளவும்
உம்மையே பற்றுவேன்;
எவ்வேளையும் எவ்விடமும்
நான் உம்மைப் போற்றுவேன்.